PR NO 628

Dt 26-07-2010

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
## பத்திரிக்கை செய்தி

### பாக்ஸ்கான் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு மயக்கம் ஏற்பட்டது குறித்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம் அங்குவார்சத்திரம் சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் இரண்டாம் பகுதியில் அமைந்துள்ள பாக்ஸ்கான் இந்தியா தொழில் நிறுவனத்திற்கு செல்போன் தயாரித்திட 30.3.2012 வரை உரிமம் (CTE) அளிக்கப்பட்டுள்ளது. அந்த தொழிற்சாலையின் முதல் தளத்தில் செல்பேசிகள் தயாரிக்கும் கூடத்தில் கடந்த 23.7.2010 அன்று மாலை 4 மணியளவில் 4 தொழிலாளர்களுக்கு வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அந்த இடத்தில் உற்பத்தி நிறுத்தப்பட்டு அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்கள் அருகில் அமைந்துள்ள நோக்கியா சிறப்புப் பொருளாதார வளாகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு அலுவலக அதிகாரிகள் 24.7.2010 அன்று அந்த இடத்தை ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில், அப்பகுதியில் வாயுவோ, இராசாயண பொருள்களோ பயன்படுத்தப்படுவதில்லை என்றும், அப்பகுதியில் தெளிக்கப்பட்ட பூச்சிமருந்து காரணமாகவே இந்த சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரிய வருகிறது.

24.7.2010 அன்று நோக்கியா சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு மாற்றப்பட்ட தொழிலாளர்களில் ஏறத்தாழ 10 பேருக்கும் மயக்கம் ஏற்பட்டு அவர்கள் திருப்பெரும்புதூரில் உள்ள ஜெயா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களில் 4 பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 6 பேர் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அன்றே வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

வேலை செய்த இடத்தில் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகவே இந்த சம்பவம் நடந்துள்ளது என்பதை மருத்துவமனை அதிகாரிகளும் உறுதி செய்தனர். இராமச்சந்திரா மருத்துவமனையில் குறிப்பிட்ட அந்த பிரிவைச் சார்ந்த ஏறத்தாழ 120 தொழிலாளர்களுக்கு 25.7.2010 அன்று முன்மருத்துவ சோதனை செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 18 பேர் வெளிப் பிணியாளராக அனுமதிக்கப்பட்டு பின்னர் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

26/7/10
C. SIVALINGAM
Public Relations Officer
Tamilnadu Pollution Control Board
Anna Salai, Guindy,
CHENNAI - 600 032

76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22353140, 22353141